# டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி
## பொள்ளாச்சி - 642 003
## நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம்

## முகாம் அறிக்கை 2016 - 17

டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் 20.02.2017 முதல் 26.02.2017 வரை நடைபெற்றது. முகாமின் நிகழ்வுகள் பின்வருமாறு.

**20.02.2017 (திங்கட்கிழமை)**



விழாவின் முதல் பாகமாக இறை வணக்கப் பாடலை நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள் செல்வி பூவிகா, கமலி ஆகியோர் பாடினர். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் G.V. ஸ்ரீராமச்சந்திரன் வரவேற்புரை வழங்கினார். ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி சாரதாமணி அவர்களால் தலைமையுரை வழங்கப்பட்டது. பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு துவக்க விழாவினைச் சிறப்பித்தனர்.

**21.2.2017 (செவ்வாய்கிழமை)**



காலை சுத்தமான இந்தியா திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியின் கீழ் சோமந்துறை, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, MCET நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களால் தூய்மைப்படுத்தப்பட்டது. அடுத்ததாக 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு MS Word, MS Excel, Paint போன்ற கம்ப்யூட்டர் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதில் சுமார் 100 மாணவர்கள் பயன் பெற்றனர்.



Rashtriya Avishkar Abiyan திட்டத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அறிவியல் சார்ந்த சில கருத்துக்கள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் 100 மாணவர்களுக்கு திரு. மகேஷ், உதவி பேராசிரியர், வேதியியல் துறை MCET மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் வழங்கப்பட்டது.

**22.02.2017 (புதன்கிழமை)**



காலை சோமந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி 9ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் நடத்தப்பட்டது. இதனால் 100 மாணவர்கள் பயன் பெற்றனர். அடுத்த நிகழ்ச்சியாக வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி பேராசிரியர் முனைவர் பிரகதீஸ் அவர்கள் இயற்கை வேளாண்மை பற்றி மாணவர்கள் மற்றும் விவசாயிகளிடையே கருத்துரை ஆற்றினார். மாலையில் பணமில்லா பரிவர்த்தனை குறித்த விழிப்புணர்வை கிராம மக்களிடையே சென்று நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் ஏற்படுத்தினர். மேலும் நதி நீர் மாசுபடுதல் பற்றிய மௌன நாடகம் எமது மாணவர்களால் தெரு நாடகமாக நடத்தப்பட்டது.



**23.02.2017 (வியாழக்கிழமை )**



சோமந்துறை மேல்நிலைப்பள்ளி வளாகம் மற்றும் பஞ்சாயத்து அலுவலகத்தில் 15 நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டன. சமுதாய மேம்பாட்டுத் திட்ட அலுவலர் திரு. நாகராஜன் அவர்களின் தலைமையில் இரு சக்கர வாகன பழுது பார்ப்பு பயிற்சி இலவசமாக கிராமப்புற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் தையல் ஆசிரியை திருமதி பூங்கொடி அவர்களால் கிராமப்புற பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாலை, திட்ட அலுவலர் திரு. நாகராஜன் அவர்களால் சுய வேலைவாய்ப்பு மற்றும் சுய உதவிக்குழு பற்றிய விழிப்புணர்வு கருத்துரை வழங்கப்பட்டது.



**24.03.2016 (வெள்ளிக் கிழமை)**



காலை மத்திய அரசின் காப்பீட்டுத்திட்டங்கள் பற்றிய விளக்கவுரை திட்ட அலுவலர் திரு. நாகராஜன் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் வங்கி பரிவர்த்தனை பற்றிய நிகழ்ச்சி கிராமப்புற மக்களுக்கு வழங்கப்பட்டது. மாலையில் சோமந்துறை



ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் விளையாட்டு போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் ஒப்புவித்தல் போட்டிகள் MCET நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் நடத்தப்பட்டது. அதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**25.02.2017 (சனிக்கிழமை)**





காலை 10 மணியளவில் சுகாதாரம், சூழலியல், டெங்கு காய்ச்சல் மற்றும் பன்றிக்காய்ச்சல் போன்ற கருத்துக்களை முன் வைத்து பேரணி MCET நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் நடத்தப்பெற்றது. இப்பேரணியில் சுகாதார ஆய்வாளர் (ஓய்வு) திரு. சிதம்பரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ள மருத்துவ முகாம் பற்றி ஊர் மக்களுக்கு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் வீடு வீடாகச் சென்று தெரிவிக்கப்பட்டது. மதியம் 1.00 மணியளவில் Ektha Bharat, Shreshtha Bharat நிகழ்ச்சி நமது அண்டை மாநிலமான கேரளாவில் உள்ள கொல்லங்கோடு பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் MCET நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் அங்குள்ள கல்லூரி மாணவர்களிடையே கலந்துரையாடினர். மாலை 6.00 மணியளவில் பள்ளி மற்றும் MCET மாணவ, மாணவர்களின் கலைநிகழ்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் பேராசிரியர். பாலசுப்பிரமணியன், சக்தி பாலிடெக்னிக் கல்லூரி (ஓய்வு) அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.




**26.02.2017 (ஞாயிற்றுக்கிழமை)**



தமிழக அரசு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் டாக்டர் ஆர். தங்கவேலு, மருத்துவர் (MCET) மற்றும் சிந்தியா மருத்துவமனை மருத்துவக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ சிகிச்சை அளித்தனர். இதில் 100 க்கும் மேற்பட்ட கிராமப்புற ஏழை நோயாளிகள் பயனடைந்தனர்.

முகாமின் நிறைவு விழா மதியம் 1 மணி அளவில் நடைபெற்றது. MCET கல்லூரியின் இயந்திரவியல் துறை பேராசிரியர் டாக்டர் ராமதிருமுருகன், மற்றும் மருத்துவர் ஆர். தங்கவேலு ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினைச் சிறப்பித்தனர்.



நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள்

1.

2.

3.

முதல்வர்